# இராமாயணம் பிறந்த கதை...!!

தமிழ் இலக்கியத்தில் மிகச் சிறப்பாக போற்றப்படும் காப்பிய நூல்களுள் ஒன்று இராமாயணம். இந்நூலின் ஆசிரியர் கம்பர். இவர் இயற்றிய கம்பராமாயணம் நூலானது புகழ் பெற்றதாகும்.

வால்மீகி முனிவர் வடமொழியில் இராமாயணத்தை இயற்றினார். அதனை, தமிழ் பண்பாட்டிற்கு ஏற்ப கம்பர் தமிழில் தந்த காவியமே இராமாயணமாகும்.

உலகம் போற்றும் உன்னத இதிகாசமான இராமாயணத்தை வடமொழியில் முதலில் இயற்றிய வால்மீகி முனிவர் பற்றிய தகவல்களிலிருந்து காண்போம்!

வால்மீகி அல்லது வால்மீகி முனிவர் என்பவர் இந்தியாவின் பழம்பெரும் இரண்டு இதிகாசங்களில் ஒன்றான, இராமாயணம் எனும் இதிகாசத்தை இயற்றியவர்.

இவர் ஒரு வடஇந்தியர் ஆவார். இவர் இராமாயணத்தை வட மொழியில் எழுதினார். இவர் இயற்றிய இராமாயணம் இந்தியாவின் அனைத்து மக்களிடமும் பரவி, உலகில் பல்வேறு மொழிகளிலும் மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

இராமாயணம் நூல் இதிகாசமே என்றாலும், அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் புவியியல் அமைவுகள், விவரிக்கப்பட்டிருக்கும் ஆட்சி முறைகள், அரசுகள் போன்றவற்றை ஆய்வுநோக்கில் பார்க்கும்போது, வெறுமனே கற்பனையை மட்டுமே ஆதாரமாக கொண்டு இவ்வாறான ஒரு இதிகாசத்தைப் படைத்திருக்க முடியாது. இது கி.மு 4ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்டுள்ளதால், அந்தகாலத் தன்மைகளுக்கு அமைவாக, மந்திரம், மாயை உடன் இதிகாச சாயலுடன் எழுதப்பட்ட ஒரு வரலாறாகவும் இருக்கலாம் என கருதுவோரும் உளர். மேலும் இராமாயணம் இதிகாச நூலை இயற்றியவரான வால்மீகி ஒரு வடஇந்திய ஆரிய மரபினர். வால்மீகி முனிவரின் ஆசிரமம் தமசா நதிக்கரையில் அமைந்து இருந்தது.

வால்மீகி ஆசிரமத்திற்கு ஒருநாள் நாரதர் வந்தார். அவருக்கு உபசாரங்கள் செய்து வரவேற்ற பிறகு, வால்மீகி முனிவர் அவரை நோக்கி, 'நாரதரே, இந்த யுகத்தில் முப்பத்திரண்டு கல்யாண குணங்களும் பொருந்திய நேர்மையான, சத்தியம் தவறாத, வீர தீர பராக்கிரமசாலியான புருஷன் யாராவது இருக்கிறானா?' என்று கேட்டார். அதற்கு நாரதர் ராமபிரானுடைய வரலாற்றை முழுவதுமாக வால்மீகிக்கு எடுத்துரைத்தார். நாரதர் இறுதியில் விடைபெற்று சென்றபின், வால்மீகி தனது சீடர் பரத்வாஜருடன் தமசா நதிக்கரைக்குச் சென்றார்.

நதிக்கரையில் உல்லாசமாக அமர்ந்திருந்த ஒரு ஜோடி நாரைகளைப் பார்த்தார். அவற்றின் அந்தரங்க அன்புப் பிணைப்பினைக் கண்டு ரசித்தவாறே அவர் நீராடுகையில், எங்கிருந்தோ வந்த ஓர் அம்பு ஆண் நாரையின் மீது பாய்ந்து அதன் உயிரைக் குடித்தது. அதைக் கண்ட பெண் நாரை துக்கம் தாளாமல் ஓலமிட்டது.

இதைக் கண்டு மனம் பதறிய வால்மீகி, அம்பை எய்த வேடனை மிகுந்த சீற்றத்துடன் நோக்கி, 'இதயமற்ற அரக்கனே! என்ன காரியம் செய்து விட்டாய் நீ? வாழ்நாள் முழுதும் நீ அமைதியின்றி தவிப்பாய்!' என்று உணர்ச்சிவசப்பட, அவருடைய வாயிலிருந்து வந்த சொற்கள் அவரை அறியாமலேயே ஒரு கவிதை வடிவில் வெளிவந்தன. ஆசிரமத்திற்குத் திரும்பி வந்த பிறகும் அவருடைய படபடப்பு அடங்கவில்லை. சற்று நேரத்தில், பிரம்மா வால்மீகியைக் காண வந்தார்.

பிரம்மாவை விழுந்து வணங்கி வால்மீகி நின்றபோது, பிரம்மா, 'வால்மீகி, என்னுடைய அருளினால் உனக்கு கவிதை பாடும் திறமை உண்டாகிவிட்டது. ராமபிரானது வரலாற்றை இதற்கு முன் நீ கேட்டு இருக்கிறாய். அதை நீ காவியமாக இயற்று. இந்த உலகம் இருக்கும் வரை அவை காவியமாக நிலைத்திருக்கும்!' என்று வாழ்த்தி விட்டுச் சென்றார். பிரம்மாவின் அருளினால் வால்மீகி ராமாயணத்தை இயற்றினார். அதைப் படித்து மகிழாதவர் யாரும் இருக்க மாட்டார்கள்.

## வால்மீகி வரலாறு...!!

வால்மீகி ஒரு வழிப்பறி கொள்ளையனாக இருந்தவர். அந்த கொள்ளைக் கூட்டத்துக்கு தலைவன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் பெரிய குடும்பி. அவன் கொள்ளையடிப்பதில் மிக சமர்த்தியமிக்கவன் என்பதால் பலர் அவனை அண்டி வாழ்ந்தனர். ஒரு தடவை அவன் தனியே கொள்ளையடிக்க சென்றபோது அவனிடம் ஒரு முனிவர் மாட்டிக்கொண்டார். கையில் ஒரு தம்புரா வைத்து கொண்டும் நாராயண, நாராயண என்று பாடிக்கொண்டும் அந்த முனிவர் வந்து கொண்டிருந்தார்.

இவன் அவர் எதிரில் போய் எமன் போல் நின்றதும் அவர் நடுநடுங்கி இவனைப் பார்த்து யாரப்பா நீ! உனக்கு என்ன வேண்டும்? என்று கேட்டார். அதற்கு அவன், நான் யாராய் இருந்தால் உமக்கு என்ன? உம்மிடம் இருக்கும் எல்லாவற்றையும் எடுத்து வையும் என்றான்.

முனிவர், நான் ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு பதில் சொன்ன பிறகு என்னிடம் இருப்பதை எல்லாம் நீ கொள்ளை கொண்டு போகலாம் என்றார். சீக்கிரம் கேட்டு தொலையும் என்றான். நீ யாருக்காக இந்த கொள்ளையும், கொலையும் செய்கிறாய்? வேறு யாருக்காக. என் மனைவி மக்கள் இவர்களுக்காக தான். என் மீது அவர்களுக்கு இருக்கும் அன்பு கொஞ்சம் நஞ்சம் இல்லை.

உன் பாவங்களில் அவர்கள் பங்கு கொள்வார்களா? அதனை முதலில் கேட்டுப்பார். ஆகா முனிவரே! தப்பித்து போக முயல்கிறீரா? இதெல்லாம் என்னிடம் முடியாது. இல்லையப்பா! நீ வேண்டுமானால் என்னைக் கட்டிப் போட்டுவிட்டுப் போ. அவர்கள் உன் பாவத்தில் பங்கு கொள்வதாய் கூறிவிட்டால் என்னிடம் உள்ளதை எல்லாம் எடுத்துக்கொள். அவர்கள் இல்லையென்று சொல்லிவிட்டால் நான் சொல்வதை நீ செய்ய வேண்டும் என்றார் அந்த முனிவர்.

கொள்ளையர் தலைவன் யோசித்துப் பார்த்தான். அந்த முனிவர் சொல்வதும் சரியாக தான் இருக்கிறது. நாம் கேட்டுத்தான் பார்ப்போமே! என்று நினைத்து அந்த முனிவரை அங்கிருந்த ஒரு மரத்தில் கட்டிப் போட்டு விட்டு சென்றான். திரும்பி வரும்போது முற்றிலும் மாறியிருந்தான் அவன். ஓடி வந்தவன் முனிவரின் காலில் விழுந்து சுவாமி, நீங்கள் சொன்னது சரிதான் என்று கண்கலங்கியபடியே முனிவரின் கட்டுகளை அவிழ்த்துவிட்டான். என்னப்பா நடந்தது. சுவாமி! நீங்கள் சொன்னபடி, நான் போய் என் மனைவி, குழந்தைகள், நண்பர்கள், உற்றார், உறவினர் எல்லோரிடமும் என் பாவத்தில் பங்கு கொள்வீர்களா? என்று கேட்டேன். எல்லோரும் ஒரே விதமாய் நீ பாவ வழிகளில் சம்பாதித்தால் அந்த பாவங்களை நீதான் அனுபவிக்க வேண்டும். அதில் எங்களுக்கு எந்த பங்கும் இல்லை என்று கூறிவிட்டார்கள்.

நீங்கள் தான் நான் செய்த எல்லா பாவங்களில் இருந்தும் விடுபட ஒரு நல்ல வழி காண்பிக்க வேண்டும் என்றான். நீ செய்த பாவங்களுக்கு எல்லாம் தகுந்த பிராயச்சித்தம் ராம நாமத்தை சொல்லிக் கொண்டு இருப்பது தான் என்றார். சுவாமி! என்ன நாமம் அது? என் வாயில் நுழையவில்லையே சுவாமி! கவலையில்லை. இதோ இங்கிருக்கும் மரத்தின் பெயர் என்ன? இது மரா மரம். நீ இந்த மரத்தின் பெயரை சொல்லிக்கொண்டிரு. அது போதும் என்றார்.

அவர் போனபின் அந்த கொள்ளையர் தலைவன் அங்கேயே அமர்ந்து தன்னை மறந்து மரா மரா மரா என்று ஜபிக்க ஆரம்பித்தான். அது ராம ராம ராம என்று ஒலித்தது. அந்த ராம நாம ஜபத்தால் அவன் பாவமெல்லாம் அழிந்து ஞானம் பெற்றான். அவர் தவம் முடிந்த பின் புற்றிலிருந்து வெளியே வந்தார். புற்றிலிருந்து வந்ததால் வால்மீகி என்று அழைக்கப்பட்டார். பின்னர் இராமாயணம் எழுதி அழியா புகழ் பெற்றார். கொள்ளையர் தலைவனாய் இருந்து நாரதரின் கருணையால் நல்வழியில் திருப்பி விடப்பட்டவர் தான் வால்மீகி முனிவர்.

## திருமாலின் ராம அவதாரம்...!!

கோசல நாடு கங்கை நதிபாயும் நீர் வளமும், நிலவளமும், குடிவளமும் கொண்ட வளமை மிகுந்த நாடாகும். கோசல நாட்டின் தலைநகரம் அயோத்தி ஆகும். இந்நகரத்தில் வாழும் மக்கள் அனைவரும் தருமகுணசீலர்கள். அயோத்தி என்ற சொல்லுக்கு யுத்தம்

இல்லாத ஊர் என்று பொருள். அயோத்தி நகரம் போரும், சினமும் இன்றி சாந்தமாக திகழ்ந்தது.

அயோத்தி மாநகரை ஆதித்தன் குலத்தில் அஜமகா ராஜனுக்கும், இந்துமதிக்கும் மகனாக பிறந்த தசரத சக்கரவர்த்தி மக்களுக்கு நல்லாட்சி புரிந்து வந்தார். இவருடைய ஆட்சியில் தருமம் தழைத்து நின்றது. மக்கள் துன்பம் இன்றி இன்பமாக வாழ்ந்தார்கள். தசரத மன்னருக்கு கௌசலை, கைகேயி, சுமித்திரை என்று மூன்று மனைவியர் இருந்தார்கள். இவருக்கு மக்கட்பேறு இல்லாததால் இவர் வேறு வேறு மாதர்களை திருமணம் செய்து கொண்டார். அவ்வாறு செய்துகொண்ட பெண்கள் மொத்தம் 360 பேராகும். இவர் அறுபதினாயிரம் ஆண்டுகள் நல்லற நாயகனாக அரசு புரிந்தார்.

தசரதர் மன்னர் தமக்குப் பின் தருமநெறி தவறாமல் தரணியை அரசு புரிய ஒரு மகன் பிறக்கவில்லையே என்று பெரிதும் வருந்தினார். அரசவையில் தசரத சக்கரவர்த்தி, தமது குலகுருவாகிய வசிஷ்ட முனிவரை வணங்கி, குருநாதா! அடியேன் தங்கள் ஆசியினால் இந்த உலகத்தில் பத்து திசைகளிலுமிருந்து வந்த பத்து ரதங்களை வென்று, தசரதன் என்று பேர் பெற்றேன். சம்பரனை வென்று இந்திரனுக்கு உதவி புரிந்தேன். ஆனால் தங்கள் அடியேனுக்கு மக்கட்பேறு வாய்க்கவில்லை. யாழ் என்ற இன்னிசைக் கருவிகளின் நாதங்களைக் கேட்கும் என் செவியில் அப்பா! என்று அழைக்கும் மழலை சொல் கேட்கும் பாக்கியம் பெற்றேனில்லை என கூறி மிகவும் வருந்தினார். தாங்கள் பிரம்ம புத்திரர். அடியேனுக்கு மக்கட்பேறு உண்டாக அருள்புரிய வேண்டும் என்று கூறி முறையிட்டார்.

வசிஷ்ட முனிவர் ஊனக்கண்களை மூடினார். அப்பொழுது அவருக்கு ஞானக்கண் திறக்கப்பெற்றது. அதில் முனிவர் கண்ட காட்சி,

திருமால் திருப்பாற்கடலில் அரவணையில் அறிதுயில் புரிகின்றார். இராவணாதி அரக்கர்களால் பலகாலமாக துன்பப்படுகின்ற பிரமாதி தேவர்கள் நாராயணரிடம் தஞ்சம் புகுந்து கருணைக்கடலே! கமலக்கண்ணா! நாங்கள் இராவணன் முதலிய அரக்கர்களால் பஞ்சுபடாத பாடுபடுகின்றோம். தாங்கள் அசுர குலத்தை அழித்து, நாங்கள் செழித்து வாழ அருள் புரியவேண்டும் என்று சரண் அடைந்தார்கள்.

திருமால் தேவர்களை நோக்கி அமரர்களே! நான் பூவுலகில் இராமனாக அவதரித்து இராவணாதி அரக்கர்களை அழித்து தங்களது துயர் நீக்கி அருள் புரிவேன். ஆகவே, நான் மனிதனாக வந்து அவதரிப்பேன். தேவர்களாகிய நீங்கள் முன்னதாகவே வானரங்களாகப் பிறந்து இருங்கள் என்று கட்டளையிட்டார். திருமாலின் கட்டளையின்படி,

வானவர்கள் வானரங்களாகப் பிறந்தார்கள். இந்திரன் வாலியாகப் பிறந்தான். சூரியன் சுக்கிரீவனாகப் பிறந்தான். அக்கினித்தேவன் நீலனாகப் பிறந்தான் (நீலன் சேனை தலைவன்). விசுவபிரம்மா நளனாகப் பிறந்தான், வாயுதேவன் அனுமனாகப் பிறந்தான். ருத்ராம்சமும் அதில் கலந்து நின்றது. உபேந்திரன் அங்கதனாகப் பிறந்தான். பிரம்மதேவர், நான் ஏற்கனவே கரடிக் குழுத் தலைவன் ஜாம்பவந்தனாகப் பிறந்திருக்கிறேன் என்றும் கூறினார்.

## திருமாலின் கட்டளை

தர்மாங்கதர் என்ற ஓர் அந்தண முனிவர், கங்கைக்கரையில் 'ஓம் நமோ நாராயணாய' என்ற அஷ்டாமூர மந்திரத்தை ஜபித்துக்கொண்டு தவம் செய்து கொண்டிருந்தார்.

அக்கிரகாரத்தில் ஓர் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் சாந்த குணமுடையவர். இவருடைய மனைவியின் பெயர் கலகை. இவர் அந்தணருக்கு எதிர்மறையாக இருந்தார். இவள் கணவர் வேண்டாம் என்பதை வேண்டும் என்று செய்வாள். இதனால் வெறுப்படைந்த அந்தணர் வீட்டை விட்டு வெளியில் கிளம்பிச் சென்றார். அவ்வாறு செல்லும்போது வழியில் அந்தணரை பார்த்து ஐயா, எங்கே போகிறீர்? என்று ஒருவர் கேட்டார். மனைவியின் துன்பம் என்னால் தாங்க முடியவில்லை. அதனால் வீட்டைவிட்டு வெளியேறி போகின்றேன் என்றார். வேண்டாம் என்பதை வேண்டும் என்று செய்கிறாள். வேண்டும் என்பதை வேண்டாம் என்று செய்கிறாள். அன்பரே! நான் சொல்லும்படி கடைபிடியுங்கள். உங்களுக்கு வேண்டாம் என்பதை வேண்டும் என்று சொல்லுங்கள், என்றார்.

அந்தணர் வீட்டுக்குச் சென்றார். கலகை! இன்று நான் சாப்பிடமாட்டேன் என்றார். சாப்பிடு என்று உணவை கோபத்துடன் கொடுத்தாள். இவ்வாறு அந்தணர் கலகையிடம் வேண்டும் என்பதை வேண்டாம் என்று கூறியும் வேண்டாம் என்பதை வேண்டும் என்று கூறியும் சுகமாக வாழ்ந்து வாழ்ந்தார். ஒருநாள் அந்தணர் மனைவியிடம், கலகை! நாளை என் தந்தையாருடைய சிரார்த்தம். வீடு வாசல் மெழுகாதே. நீராடாதே. சமைக்காதே என்ற கூறினார். அவள் எல்லாவற்றையும் ஒழுங்காகச் செய்து வைத்தாள். பிண்டப்பிரசாதத்தை ஜலதாரையில் கொட்டுமாறு சொல்லியிருக்க வேண்டும். அவர் சற்றுக் கவனக்குறைவாக, பிதுர் பிரசாதத்தைச் சுத்தமான நீரில் கொட்டுமாறு கூறிவிட்டார். அவள் அதைக் கொண்டு போய் அசுத்தமான தண்ணீரில் கொட்டிவிட்டாள். அந்தணர் கோபத்தில், எனக்கு ஆயிரமாயிரம் குற்றங்கள் செய்தும் அத்தனையும் பொறுத்துக்கொண்டேன். பிதுர்களின் தூய பிரசாதத்தை ஜலதாரை தண்ணீரில் கொட்டினாயே! இது எவ்வளவு பெரிய பாவம், கலகை! நீ அலகையாகப் போகக் கடவது என்று சாபமிட்டார். அந்த சாபத்தால் அவள் பெண் பேயாக மாறினாள். அங்கும், இங்குமாக அலைந்து திரிந்து வேதனைப்பட்டாள்.

கங்கைக்கரையில் ஜபம் செய்து கொண்டிருந்த தர்மாங்கதரை இந்த பெண் பேய் பிடிக்கச் சென்றது. அப்போது முனிவர் கமண்டலத் தண்ணீரை, 'ஓம் நமோ நாராயணாய' என்று தெளித்தார். அந்த மந்திர நீரால் அவளது பாவமும், சாபமும் விலகிவிட்டன. அவள் அவருடைய அடிமலர் மீது வீழ்ந்து தொழுது, தர்மாங்கதரே! நான் கலகை என்ற பெயருள்ள பெண். கணவனுக்கு குற்றங்கள் செய்த பாவத்தால், அவருடைய சாபத்தால் பேயாக அலைந்து நொந்தேன். தர்மாங்கத முனிவர், அம்மா! அழாதே. நான் அறிவு தோன்றிய நாள் தொட்டு இன்றுவரை செய்த தவத்தில் பாதி உனக்கு தந்தேன் என்றார். வைகுண்டத்திலிருந்து வந்த பொன்மணி விமானம் இருவரையும் வைகுண்டத்திற்கு அழைத்து சென்றது. அவர்கள் பரவாசுதேவனை சேவித்த பேரின்பத்தை எய்தினார்கள்.

ஸ்ரீமன் நாராயணர் தர்மாங்கதரை பார்த்து, தர்மாங்கதரே! நீ பூவுலகில் ஆதித்தர் குலத்தில் பிறந்து தசரதன் என்ற பெயர் பெற்று அறுபதினாயிரம் ஆண்டு தவம் செய்வாயாக. உனக்கு நான் மகனாகப் பிறந்து ராமன் என்ற பெயருடன் விளங்கி இராவணனை வதம் செய்து நாட்டுக்கு நலம் செய்வேன். அம்மா! கலகை! நீ கேகய நாட்டில் அசுவபதி என்ற மன்னனுக்கு மகளாகப் பிறந்து கைகேயி என்ற பெயருடன் வளர்வாய். தர்மாங்கதருடைய தவத்தில் பாதி பெற்றதனால் கௌசலை வயிற்றில் நான் பிறந்தாலும் என்னை நீ அன்பு மகனாக வளர்ப்பாயாக. சமயம் வரும்பொழுது என்னைக் கானகம் போகச் சொல்லிக் கலகம் செய்வாய் என்றார்.

திருமாலுடைய சக்கரம் பரதராகவும், சங்கு சத்துருக்கனாகவும், ஆதிசேஷன் இலக்குமணனாகவும் பிறக்குமாறு திருமால் கட்டளையிட்டு அருளினார். இவற்றையெல்லாம் வசிஷ்டர் ஞானக் கண்ணால் கண்டார்.

## இராம அவதாரம் அயோத்தி நகர மகிழ்ச்சி...!!

வசிஷ்ட முனிவர், தசரதரே! உனக்கு சிறந்த மக்கட்பேறு கிடைக்கும். எதிர்காலம் மிகச் சிறப்பாக இருக்கும். அங்க நாட்டில் ரோமபாதன் என்னும் மன்னன் ஆட்சி புரிகிறான். அந்த நாட்டில் பன்னிரெண்டு ஆண்டுகளாக மழையில்லாமல் பஞ்சம் நேர்ந்தது. கலைக்கோட்டு முனிவரை அங்கு அழைத்து வந்ததால் மழை பொழிந்து வளம் பெருகியது. கலைக்கோட்டு முனிவர் அளவற்ற தவம் செய்தவர். அவரை அழைத்துக் கொண்டு வந்து புத்திர காமேஷ்டி யாகம் செய்தால் உனக்குப் புத்திர பாக்கியம் உண்டாகும் என்று கூறினார்.

வசிஷ்ட முனிவரின் அறிவுரைபடி, தசரதச் சக்கரவர்த்தி அங்க நாட்டை அடைந்தார். அங்க நாட்டு மன்னரிடம் கலைக்கோட்டு முனிவரை அயோத்திக்கு அனுப்புமாறு வேண்டிக் கொண்டார், தசரதச் சக்கரவர்த்தி. தசரதச் சக்கரவர்த்தியின் வேண்டுகோளுக்கிணங்க கலைக்கோட்டு முனிவர் என்கின்ற ரிஷ்யசிருங்கர் தன் மனைவி

சாந்தையுடன் அயோத்தி மாநகருக்கு எழுந்தருளினார். ஓராண்டு காலம் தசரதர் கலைக்கோட்டு முனிவருக்கு வந்தனை வழிபாடு செய்தார். தசரதர், ஒருநாள் ரிஷ்யசிருங்கரை வணங்கி முனிவரே...! அடியேன்! அறுபதினாயிரம் ஆண்டு இவ்வுலகை ஆண்டேன். எனக்குப் பின் இந்த உலகத்தை அறநெறியில் ஆட்சிபுரிய புத்திரன் உண்டாக அருள்புரிய வேண்டும் என்று வேண்டி கொண்டார்.

புத்திரகாமேஷ்டி யாகம் செய்தால் உனக்கு புத்திரபாக்கியம் கிடைக்கும் என்று கலைக்கோட்டு முனிவர் கூறினார். பின்னர் பெரிய யாகசாலை அமைத்து யாகத்துக்குரிய திரவியங்களைக் குவித்து, வசிஷ்ட முனிவர் முதலிய தவசீலர்கள் துணைபுரிய, வேதமந்திரங்களைக் கூறி சிறந்த வேள்வியைச் செய்தார் கலைக்கோட்டு முனிவர். பூர்ணாகுதி கொடுத்தவுடன் ஒரு தெய்வபூதம் யாகத்தில் தோன்றி யாக பாயாசத்தை வழங்கி மறைந்தது.

கலைக்கோட்டு முனிவரின் கட்டளைப்படியாக பாயாசத்தை ஒரு பாதி கௌசலைக்கும், மற்றொரு பாதியை கைகெயிக்கும் மன்னர் வழங்கினார். கௌசலையும், கைகெயியும் மன்னர் வழங்கிய பாயாசத்தில் பாதி, பாதி சுமித்திரைக்கு வழங்கினார்கள். மூன்று தாய்மார்களும் கருவுற்றார்கள். மூவரும் பன்னிரெண்டு மாதங்கள் கரு இருந்தார்கள்.

ஆன்மாக்கள் வானத்திலிருந்து மழை வழியாக மண்ணுலகத்தை அடைகின்றன. அவ்வாறு வந்த உயிர்கள் காய், கனி, தானியங்களில் கலந்து தந்தையார் வயிற்றில் 2 மாதங்கள் கரு இருந்த பின், தாய் வயிற்றில் பத்துமாதம் கரு இருந்து மகவாகப் பிறக்கின்றன. ஆகவே, உயிர்கள் கருவில் பன்னிரெண்டு மாதங்கள் இருக்கின்றன. முதலில் நம்மை, கருச்சுமந்தவர் தந்தையார். அதனால் தான் நம்முடைய பெயருக்கு முன்னால் தந்தையார் எழுத்தைப் பேறுகின்றோம். இராமருடைய கரு மன்னவன் பாலின்றி பாயாச வழியாக தாய்வயிற்றை அடைந்ததால் இவர்கள் 12 மாதம் கருச்சுமந்தார்கள்.

சித்திரை மாதம் நவமி திதி புனர்பூச நட்சத்திரம் கடக லக்னத்தில் இராமபிரான் அவதாரம் செய்தார். மறுநாள் பூச நட்சத்திரத்தில் பரதரும், அதற்கு மறுநாள் ஆயில்ய நட்சத்திரத்தில் இலட்சுமணரும், சத்ருக்னரும் அவதாரம் செய்தார்கள். தசரதச் சக்கரவர்த்தி மக்கட்பேறு உண்டானதால் தான தருமங்கள் செய்தார். அயோத்தி மாநகரம் இன்ப வெள்ளத்தில் மூழ்கியது.

வசிஷ்ட முனிவர் இராமன், பரதன், இலட்சுமணன், சத்ருக்னன் என்று பெயர் சூட்டினார்.

## விசுவாமித்திர முனிவரின் கோபம்...!!

நான்கு குமாரர்களும் வளர்ந்தார்கள். ஐந்து வயதுக்கு மேல் நான்கு குமாரர்கள் வசிஷ்டருடைய ஆசிரமத்தில் வளர்ந்து கலைகளை பயின்றார்கள். எல்லா கலைகளிலும் வல்லவராக விளங்கினார்கள். தசரத சக்கரவர்த்தி அரசவையில் சுந்தர வடிவுடன் வீற்றிருந்தார். வசிஷ்டர், சுமந்திரர், யாபாலி முதலிய அறிஞர்கள் அவரை சூழ்ந்து அமர்ந்து இருந்தார்கள்.

விசுவாமித்திர முனிவர் அங்கு எழுந்தருளினார். கடைக்காவலன் ஓடிவந்து மன்னரை வணங்கி, விசுவாமித்திர முனிவர் வருகின்றார் என்னும் செய்தியை கூறினான். தசரத சக்கரவர்த்தி விசுவாமித்திர முனிவரை சந்தனங்களாலும், மலர்களாலும் பாதபூஜை செய்தார். தசரதா! வசிஷ்ட முனிவருடைய கருணை உனக்கு இருப்பதால் எல்லா காரியங்களும் சித்தியாகும். உன்னை போன்ற உத்தம அரசனை எங்கும் காண இயலாது. அரசர் பெருமானே! என்னை போன்ற முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் இடையூறு வந்தால் தெய்வங்களிடம் முறையிடுவோம். நிறைவேறாத குறைகளை அயோத்தி மாநகரம் வந்து உன்னிடம் முறையிடுவோம். எங்களுக்கு உன்னைத்தவிர புகலிடம் ஏது? என்று விசுவாமித்திர முனிவர் கூறினார்.

தசரதர் அகமும், முகமும் மலர்ந்தது. குருநாதா! நான் தங்களுடைய அடிமை. நான் தங்களுக்கு என்ன செய்ய வேண்டும்? கட்டளையிடுங்கள், என்றார். மன்னர் பெருமானே! உலக நலன் கருதி நான் தருக்கள் நிறைந்த குளிர்ந்த கானகத்தில் யாகம் செய்தேன். அதனை அரக்கர்கள் தடுத்து இடையூறு செய்கின்றார்கள். அந்த வேள்வியை காவல் புரிய ஒருவனை அனுப்ப வேண்டும் என்று கூறினார்.

மன்னவனே! சாமான்யமான போர் வீரனால் வேள்வியை காவல் புரிய முடியாது. ஐயனே! தங்கள் அடியேன் வருகின்றேன். வேந்தனே! உன்னாலும் முடியாது, என்றார். உன்னை விட பல மடங்கு சிறந்தவன் ஒருவன் இருக்கின்றான் அவனை அனுப்புக. குருநாதா! அயோத்தியில் என்னைப் பார்க்கிலும் சிறந்தவன் இருக்கின்றானா? குருநாதா! சுமந்திர், மதிநுட்பம் உடையவர் கூறியதைக் கேட்டீரா, என்னைவிட சிறந்தவன் இல்லாததை இருப்பதாக எண்ணி கூறுகின்றீர்.

தசரதா! உன்னைப் பார்க்கிலும் ஓராயிரம் கோடி மடங்கு உயர்ந்தவன், அயோத்தியில் இருக்கிறான். அவனை அனுப்பு. நான் ஒருபோதும் இல்லாத ஒன்றை இருப்பதாக கூறமாட்டேன். என் வாக்கு சத்தியம். விசுவாமித்திரர் கூறியதை கேட்டு தசரதர் சிறிது சிந்தித்தார். என்னைப் பார்க்கிலும் சிறந்தவர் வசிஷ்ட முனிவர் தான். தாங்கள் அவரை அழைத்துப் போங்கள், என்றார் சக்கரவர்த்தி. விசுவாமித்திரர் புன்னகைத்தார்! நான் கூறியவர் வசிஷ்டர் முனிவர் அன்று. மன்னவனே, நீ பெற்ற நான்கு செல்வர்களும் அரிய ஆற்றல் படைத்தவர்கள். அதில் இராமனை அனுப்புக என்றார். இராமனை அனுப்பு என்ற சொல் மன்னவனை வாட்டி வதைத்தது. கவலையில்

ஆழ்ந்தார். சக்கரவர்த்தி விசுவாமித்திரருடைய திருவடியில் வீழ்ந்தார். குருநாதா! இராமனோ இளம் பாலகன், போர் முகம் அறியாதவன். அடியேன்! பல போர்களில் வெற்றி பெற்றவன். அரக்கர்களை கொன்று வேள்வியை முடித்துக் கொடுப்பேன் என்றார், தசரத சக்கரவர்த்தி. விசுவாமித்திர முனிவர் வெகுண்டு எழுந்தார். அவருடைய கோபக்கனல் உலகங்களை வெதுப்பியது. நிலம் நடுங்கியது, சராசரங்களெல்லாம் அசைந்தன.

விசுவாமித்திர முனிவரின் சீற்றத்துக்கு அஞ்சிய வசிஷ்ட முனிவர் தசரதரை பார்த்து மன்னவனே! விசுவாமித்திரருடன் இராமனை அனுப்பி வையுங்கள். இதனால் இராமனுக்கு நன்மை உண்டாகும். என் வார்த்தையைத் தட்ட வேண்டாம் என்று கூறினார், வசிஷ்ட முனிவர். தசரதர் இராமனையும், இலட்சுமணனையும் அழைத்து வருமாறு கட்டளையிட்டார். சுமந்தரர், அரண்மனைக்கு சென்று கௌசலையிடம் கூறி இராமனை அழைத்து வந்தார்.

## கானகம் செல்லும் இராமர், இலட்சுமணர்...!!

சுமந்திரர் இராமனையும், இலட்சுமணனையும் அழைத்துக்கொண்டு வந்தார். வசிஷ்டர், விசுவாமித்திரர் மற்றும் தந்தையாரின் திருவடியில் இராமர் வீழ்ந்து வணங்கினார். தசரதர் இராம, இலட்சமணரின் கரங்களைப் பற்றி விசுவாமித்திரருடைய கரத்தில் வைத்து, குருநாதா! இவர்களுக்கு தாய், தந்தை, குரு எல்லாம் நீங்கள் தான். அறுபதினாயிரம் ஆண்டுகள் இவர்களைப் பெறுவதற்கு நான் தவம் செய்தேன். என்னுடைய உயிரை நான் தங்களிடம் ஒப்படைத்து இருக்கிறேன். தாங்கள் திரும்பவும் கொண்டு வந்து சேர்க்கவும் என்று தாழ்ந்த குரலில் விசுவாமித்திரரிடம் கூறினார். அயோத்தியில் இருந்து விசுவாமித்திர முனிவர் விடைபெற்றுப் புறப்பட்டார். தேர் முதலிய ஊர்திகளில் சென்றால் எறும்பு, புழு முதலிய சிற்றுயிர்கள் பாதிக்கப்படும் என்று முனிவர்கள் நடந்தே பிரயாணம் செய்வார்கள். அதனால், விசுவாமித்திரர் நடந்து போக நேரிட்டதால், இராம, இலட்சுமணரும் விசுவாமித்திரரை பின் தொடர்ந்து போக வேண்டியதாயிற்று. அவர்கள் போகும் வழியில் மிக புனிதமான சரயு நதியைக் கண்டார்கள். அதில் அவர்கள் நீராடினார்கள். பிறகு அவர்கள் ஒரு மலர் சோலையை அடைந்தார்கள். அங்கு காயத்ரி மந்திரத்தை ஜெபித்து சூரியனுக்கு அர்க்கியம் கொடுத்தார்கள்.

அர்க்கியம் என்பது தேவர்களுக்கும், அதிதிகளுக்கும் தீர்த்தத்தாற் செய்யும் ஒருவகை உபசாரம் ஆகும்.

சூரியன் உதிப்பதற்கு முன்பே சூரியனுக்கு அர்க்கியம் கொடுப்பது, காணாமல் கொடுப்பதாகும். சூரியன் உச்சியில் இருக்கும் பொழுது அர்க்கியம் கொடுப்பது கோணாமல் கொடுப்பதாகும். சூரியன் மறைவதற்கு முன், மாலை வேளையில் அர்க்கியம் கொடுப்பது

கண்டு கொடுப்பது ஆகும். இதை தான் காணாமல் கொடு, கோணாமல் கொடு, கண்டு கொடு என்பார்கள்.

விசுவாமித்திர முனிவர் அசோகக்கொழுந்து, மாங்கொழுந்து முதலிய கொழுந்துகளை விரித்து ராஜ குமாரர்களைப் படுக்க வைத்தார். இராமருடைய கால்மாட்டில் இலட்சுமணர் படுத்து உறங்கினார். விசுவாமித்திர முனிவர் இராமருடைய தலைமாட்டில் அமர்ந்து இராமரையே உற்று நோக்கி பார்த்துக் கொண்டிருந்தார். இராமருடைய திருமுகத்தில் கருணை வழிந்து கொண்டிருந்தது. விசுவாமித்திர முனிவர் தன் மனதில், இராமா! உன் தந்தை தசரதன் என் உரட்டலுக்குப் பயந்து இந்த கானகத்தில் உன்னை எவ்வாறு தான் அனுப்பினானோ? ஆனால், நீ எனக்கு மகனாகப் பிறந்திருந்தால் ஆயிரம் விசுவாமித்திரர் வந்தாலும் உன்னைக் கானகத்துக்கு ஒருபோதும் அனுப்பியிருக்கமாட்டேன். இராமா! நீ இந்த உலகில் மனிதனாகப் பிறந்து ஒரு சுகமும் இல்லாத இந்த கானகத்தில் வெறுந்தரையில் உறங்குகின்றாயே! என்று நினைத்துக் கொண்டு கண்விழித்துக் கொண்டிருந்தார்.

மூவரும் விடியற்காலையில் எழுந்து நீராடிக் காயத்ரி மந்திரத்தை ஜெபம் செய்து புறப்பட்டு சென்றார்கள். போகும் வழியில் அவர்கள் ஓர் சிறந்த ஆசிரமத்தைக் கண்டார்கள். இராம இலட்சுமணரைப் பார்த்து விசுவாமித்திரர், ராஜ ரத்தினங்களே! யாவரும் போற்றும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் யாகம் செய்த ஆசிரமம் ஆகும். முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் தவநிலையில் நின்றதால் இந்த ஆசிரமம் மிகவும் சிறப்பு மற்றும் சக்தி வாய்ந்தது. சிவபெருமானின் யாகத்தைக் கலைக்க மன்மதன் முயன்ற போது சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் அவன் அங்கம் அற்றவனாய் வீழ்ந்தான். அதனால் இது அங்கதேசம் என்று அழைக்கப்படுகிறது என்று கூறினார்.

## அரக்கியை வீழ்த்திய இராமபிரான்...!!

அன்று அவர்கள் அங்கு சிவ பக்தியுடன் தங்கினார்கள். மறுநாள் இராமர், இலட்சுமணர், விசுவாமித்திரர் மூவரும் தங்கள் காலை கடன்களை முடித்துவிட்டு புறப்பட்டு சென்றார்கள். போகும் வழியில் அவர்களுக்கு ஒரு கொடிய பாலைவனம் தென்பட்டது. அக்கானகத்தில் தாங்கமுடியாத வெப்ப நிலையாலும், தாகத்தாலும் இராமரும், இலட்சுமணரும் வெகுவும் சிரமப்பட்டார்கள். விசுவாமித்திரர் இராம, இலட்சுமணர்களுக்கு பலை, அதிபலை (விசுவாமித்திரர் இராமபிரானுக்கு உபதேசித்த ஒரு மந்திரம்) என்று இரண்டு விஞ்ஞைகளை உபதேசித்தார். அப்பொழுது பதினாயிரம் யானையின் பலம் அவர்களுக்கு கிடைத்தது. பசி, தாகங்கள் எல்லாம் மறைந்தன. இராமர் விசுவாமித்திர முனிவரை பார்த்து, குருவே! இக்கானகம் பாலைவனமாக இருக்க காரணம் என்ன? என்று கேட்டார். அல்லது சிவபெருமானின் நெற்றிக் கண்ணால் இக்கானகம் எரிந்ததா? என வினாவினர். என் தந்தையின் ஆட்சிக்காலத்தில் இப்படி அழியக் கூடாதே! என்று வினாவினர்.